## பஸ்கொட பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 10 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 31 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பஸ்கொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2014 ஆண்டிற்கான கிடைத்திருந்த ரூபா 4,000,000 இற்கான தொகையொன்றினை மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2014 ஆண்டு அக்டோபர், நவம்பர், திசெம்பர் மாதங்களில் செலவிடப்பட்டுள்ள திருத்தம் மற்றும் பராமரிப்பு செலவுகளாகிய ரூபா 2,414,084 தொகையொன்று மீளாய்வாண்டிற்காக செலவுகளுக்கு வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) புரநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2014 ஆண்டின் போது பிரதேச சபைக்கு நன்கொடையாக வழங்கியிருந்த கணனிகள் மற்றும் துணைக் கருவிகளின் பெறுமதியினை மதிப்பீடு செய்து நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) பிரதேச சபையின் 2014 ஆண்டிற்கான சபை அமர்வுப் படிகள் மீளளிப்பு செய்யும் போது தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் மோட்டார் சைக்கிள்களுக்காக அறவீடு செய்திருந்த ரூபா 491,200 இற்கான தவணைப் பணத்தினை மீளாய்வாண்டிற்கான வருமான உதவியின் கீழ் போலவே சம்பளங்கள் மற்றும் படிகள் செலவின் கீழும் காட்டியிருக்கவில்லை.

(உ) வாராந்த சந்தையின் அபிவிருத்தி வேலைக்காக உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன் தொகையில் 2013 திசெம்பர் மாதத்திற்கான வட்டித் தொகை ரூபா 11,175 இனை மீளாய்வாண்டிற்கான நிகழ்ச்சித் திட்டம் 5 இல் வட்டி கொடுப்பனவு பங்கிலாபம் மற்றும் பணிக்கொடை செலவுகளுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,977,490 தொகையாக காணப்பட்டதுடன் துணைப்பதிவேடு/பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,785,808 ஆக காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 191,682 ஆகும்.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,000,000 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,448,016 ஆகும்.

(இ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 02 வருட காலத்தை விஞ்சிய தீர்க்கப்படாத வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 609,307 ஆகும்.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,337,604 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,392,426 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

-----------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயங்கள் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி, ஏக்கர் வரி | 978 | 1,217 | 317 |
| வாடகை | 5,411 | 6,273 | 826 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 245 | 281 | - |
| ஏனைய வருமானங்கள் | 475,144 | 42,175 | 25,182 |

2.2.2 ஏக்கர் வரி

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரியின் பெறுமதி ரூபா 187,212 ஆக காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பில் போடப்பட்டவைகள் ரூபா 20,033 ஆகும். ஆண்டிற்கான பில் போடப்பட்டவைகளில் இருந்து ரூபா 17,033 ஆண்டின் போது கிடைத்திருந்ததுடன், முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவை தொகையில் ஆண்டின் போது கிடைத்திருந்த தொகை ரூபா 9,380 ஆகும். இதன் பிரகாரம் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக நிலுவை ஏக்கர் வரி அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 5 ஆகிய சிறிய பெறுமதியை கொண்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய தொகையாகிய ரூபா 180,831 தொகை 5 வருடத்திற்கு மிகையான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 3,000 இனை விட மிகையான நிலுவை மீதிகளின் பெறுமதி ரூபா 41,475 ஆகும்.

2.2.3 வாடகை

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு சந்தை வாடகை நிலுவை ரூபா 213,617 ஆக காணப்பட்டதுடன் அந்த நிலுவைத் தொகையில் ஆண்டின் போது கிடைத்தவை ரூபா 76,755 ஆகும். அதன் பிரகாரம் முன்னைய ஆண்டு தொடர்பாக 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சந்தை வாடகை நிலுவை மீதி ரூபா 136,862 ஆகும். ஆண்டின் போது நிலுவை அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 35 ஆகும்.

2.2.4 வீதி விளக்கு உதவி

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய வீதி விளக்கு உதவி ரூபா 178,596 ஆகும். மீளாய்வாண்டிற்காக பில்போடப்பட்ட தொகை ரூபா 41,472 ஆகும். அத்துடன் ஆண்டின் போது அப் பணத்தில் இருந்து ரூபா 1,800 கிடைத்திருந்தது. ஆண்டின் போது நிலுவை தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வீதி விளக்கு உதவி நிலுவைத் தொகை ரூபா 217,728 ஆகும்.

2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு

| | | ரூபா. |
|---|---|---|
| (அ) | நீதி மன்றத் தண்டப் பணம் | 561,717 |
| (ஆ) | முத்திரைக் கட்டணம் | 2,168,846 |

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------

3.1.1 கடன் வட்டி மீளளிப்பு

--------------------------------------------

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மீளளிப்பு செய்யப்படாத ஆதனக் கடன் வட்டி மீதி ரூபா 178,596 ஆக காணப்பட்டதுடன், 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அம் மீதி ரூபா 65,490 ஆகும்.

3.1.2 பதவியணிக் கடன்

--------------------------------

ஊழியர்கள் 9 பேருக்கு வழங்கியுள்ள பதவியணிக் கடனுக்காக தவணைப் பணங்கள் 05 வருடங்களை மிகைத்த காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டதுடன் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அக் கடன் மீதி ரூபா 29,603 ஆகும்.

3.2 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் ஆளணிக் கோப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| பதவியணி வகை | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 01 | 01 | - | - |
| மூன்றாம் தரம் | 01 | 02 | - | 01 |
| இரண்டாம் தரம் | 19 | 18 | 01 | - |
| ஆரம்ப தரம் | 30 | 25 | 05 | - |
| ஏனைய | - | 09 | - | 09 |
| | 51 | 55 | 06 | 10 |

பின்வரும் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளர்களினால் பதவியணிச் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 11,871,494 தொகை மீளளிப்பு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது அச் செலவு ரூபா 16,597,635 ஆகும். அதன் பிரகாரம் பதவியணிச் சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவுக்காக ரூபா 4,726,141 இற்கான தொகை சபை நிதியத்திற்கு செலவுப் பொறுப்பொன்றாகியுள்ளது.

(ஆ) திறைசேரிச் செயலாளரின் மற்றும் நிதி அமைச்சு செயலாளரின் 2002 ஜனவரி 03 திகதிய முகாமைத்துவச் சேவை சுற்று நிருப இலக்கம் 14 இன் பிரகாரம் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் 2006 ஏப்ரல் 10 திகதிய முகாமைத்துவச் சேவை சுற்று நிருப இலக்கம் 28 இன் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களில் தற்காலிக, அமைய, பிரதியீட்டு, ஒப்பந்த அல்லது வேறேதேனும் அடிப்படையாக மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்கள் உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டும் என அறிவித்திருந்த போதும் சபை 2014 ஆண்டின் போது 09 ஊழியர்களுக்கு ரூபா 2,597,829 தொகை ஒன்று செலுத்தப்பட்டுள்ளது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

-------------------------------------------------------------------

4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

--------------------------------------------------------------------------

சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானங்கள் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது சபையின் பாதீடு நிதிக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) செலவுக் கட்டுப்பாடு

(ஊ) களஞ்சிய நிருவாகம்

(எ) மனித வள முகாமைத்துவம்